(எட்டாவது பாராளுமன்றம் - முதலாவது கூட்டத்தொடர்)

**இல. 22.]**

# பாராளுமன்றம்

## ஒழுங்குப் பத்திரம்

### 2015 நவெம்பர் 27, வெள்ளிக்கிழமை, மு.ப. 9.30 மணிக்கு

## வாய்மூல விடைக்கான வினாக்கள்

168/ ’15

1.

கௌரவ லக்கி ஜயவர்தன,— சமூக வலுவூட்டல் மற்றும் நலன்புரி அமைச்சரைக் கேட்பதற்கு,— ( 1 )

(அ) (i) கடந்த அரசாங்க காலத்தில் அரசியல் காரணங்களினால் உடுநுவர தேர்தல் தொகுதியில் வாழ்வின் எழுச்சி கொடுப்பனவுகள் கிடைக்காத குறைந்த வருமானம் பெறுகின்ற குடும்பங்கள் உள்ளன என்பதை அவர் அறிவாரா என்பதையும்;

(ii) ஆமெனில், இவர்களுக்கு துரிதமாக மேற்படி கொடுப்பனவுகளை வழங்க நடவடிக்கை மேற்கொள்வாரா என்பதையும்;

(iii) ஆமெனில், அத்திகதி யாது என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) உடுநுவர தேர்தல் தொகுதியில் வாழ்வின் எழுச்சி அபிவிருத்தித் திணைக்களம் மூலம் மாதாந்தம் கொடுப்பனவுகள் வழங்கப்படுகின்ற குறைந்த வருமானம் பெறும் குடும்பங்களின் எண்ணிக்கை யாது என்பதையும்;

(ii) இவர்களுக்கு வழங்கப்படுகின்ற கொடுப்பனவின் மொத்த மாதாந்தப் பெறுமதி எவ்வளவு என்பதையும்;

(iii) மேற்படி கொடுப்பனவுத் தொகைகள் தொகுதிகளாக பிரிக்கப்பட்டுள்ளதா என்பதையும்;

(iv) ஆமெனில், தொகுதிகளுக்கு அமைய ஒவ்வொருவருக்கும் எவ்வாறு கொடுப்பனவு வழங்கப்படுகின்றதென்பதையும்;

(v) அவ்வாறு தொகுதிகளின் அடிப்படையில் கொடுப்பனவுகளைப் பெற்றுக் கொள்ளும் குடும்பங்களின் எண்ணிக்கை தனித்தனியே யாது என்பதையும்;

(vi) 2015 சனவரி 08 ஆம் திகதி உருவாக்கப்பட்ட நல்லாட்சியின் கீழ் வாழ்வின் எழுச்சி கொடுப்பனவை பெறுவோருக்கான கொடுப்பனவுகள் அதிகரிக்கப்பட்டுள்ளனவா என்பதையும்;

(vii) ஆமெனில், அத்தகைய ஒவ்வொருவருக்கும் மாதாந்தம் கொடுப்பனவுகள் அதிகரிக்கப்பட்டுள்ள விதம் யாது என்பதையும்;

அவர் சபையில் அறிவிப்பாரா?

(இ) உடுநுவர பிரதேச செயலாளர் ஆளுகைப் பிரதேசத்தினுள் வாழ்வின் எழுச்சி கொடுப்பனவுகளை பெறுகின்ற குடும்பங்களின் பெயர்கள், முகவரிகள் மற்றும் அவர்கள் பெறுகின்ற கொடுப்பனவுத் தொகைகள், கிராம அலுவலர் பிரிவு வாரியாக தனித்தனியாக யாது என்பதை அவர் சபையில் சமர்ப்பிப்பாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

2.

கௌரவ டலஸ் அழகப்பெரும,— மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சரைக் கேட்பதற்கு,— ( 1 )

(அ) (i) உள்ளூராட்சி திணைக்களத்தினால் 2014 ஆம் ஆண்டு நடைமுறைப் படுத்தப்பட்ட "கமென் கமட – தொரென் தொரட்ட" (கிராமம் கிராமமாக – வீடு வீடாக) கருத்திட்டத்தின் கீழ் ஒதுக்கப்பட்ட நிதி ஏற்பாடுகளின் மூலம் மாத்தறை மாநகர சபை ஆளுகைப் பிரதேசத்தில், பரமுல்ல, பெஹெத் கபடாவ வீதி, மதகினை அபிவிருத்தி செய்வதற்கு மாத்தறை மாநகர சபை மாத்தறை வல்கம வடக்கு, கொட்டிகாகொட ரஜமகா விஹாரை வீதி, 112/3 இலக்கத்தில் அமைந்துள்ள எக்கமுத்து விவசாய அமைப்புடன் உடன்படிக்கை செய்துகொண்டுள்ளதென்பதையும்;

(ii) கோப்பு இலக்கம் ම.ම.න.ස/නා.ඉ.දෙ/WC-3/2014-දො.දො-04 உடன்படிக்கையின் பிரகாரம், 2014 நவெம்பர் 17 ஆம் திகதி இவ்விடயத்தின் நிர்மாணிப்புகள் ஆரம்பிக்கப்பட்டு 2014 திசெம்பர் மாதம் இப்பணிகள் பூர்த்திசெய்யப் பட்டிருந்தும், இற்றைவரை சம்பந்தப்பட்ட ஒப்பந்தப் பணத்தொகை விவசாய அமைப்பிற்கு செலுத்தப்படவில்லையென்பதையும்;

அவர் அறிவாரா?

(ஆ) சம்பந்தப்பட்ட நிர்மாணிப்புகள் பூர்த்தியாக்கப்பட்டு கொடுப்பனவுக்கான கட்டணப் பட்டியல்களும் சமர்ப்பிக்கப்பட்டுள்ள மேற்படி ஒப்பந்தத்துக்கு ஏற்புடையதான பணத்தொகை வல்கம வடக்கு எக்கமுத்து விவாசாய அமைப்பிற்கு விடுவிக்கப்படும் தேதி யாதென்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

---

# பொது அலுவல்கள் ஆரம்பத்தின் போது

## பிரேரணை முன்னறிவித்தல்

1.

கௌரவ (டாக்டர்) ரமேஷ் பதிரண,— சட்டமூலம் கொண்டுவர அனுமதி,— பின்வரும் சட்டமூலம் கொண்டுவர அனுமதி வழங்கப்படுமாக :-

"இலங்கை ஔடதங்கள் சங்கத்தைக் கூட்டிணைப்பதற்கானதொரு சட்டமூலம்"

---

# பிரேரணை முன்னறிவித்தல்களும் தினப்பணிகளும்

* 1.

ஒதுக்கீட்டுச் சட்டமூலம் (2016) — (ஒதுக்கப்பட்ட ஐந்தாம் நாள்) — விவாதம் ஒத்திவைக்கப்பட்ட விடயம் (2015, நவெம்பர் 20) [1].

* 2.

நிதி அமைச்சர்,— நிதிச் சட்டத்தின் கீழ் கட்டளை,— 2004 ஆம் ஆண்டின் 11 ஆம் இலக்க நிதிச் சட்டத்தின் 22 ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும் 26 ஆம் பிரிவின் கீழ் நிதி அமைச்சரினால் ஆக்கப்பட்டு 2015 மே மாதம் 18 ஆம் திகதிய 1915/2 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2015.11.03 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான கட்டளை அங்கீகரிக்கப்படுமாக.

(அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது)

* 3.

நிதி அமைச்சர்,— உண்ணாட்டு இறைவரிச் சட்டத்தின் கீழான தீர்மானம்,— இரட்டை வரிவிதிப்பைத் தவிர்ப்பதற்கும் வருமானத்தின் மீது வரிகொடாது தட்டிக்கழிப்பதைத் தடுப்பதற்குமாக, 2014 ஏப்பிறல் 03 ஆம் திகதி இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அரசாங்கத்திற்கும் சிங்கப்பூர் குடியரசின் அரசாங்கத்திற்கும் இடையே செய்து கொள்ளப்பட்டதும், 2015.09.23 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான ஒப்பந்தமானது 2006 ஆம் ஆண்டின் 10 ஆம் இலக்க உண்ணாட்டரசிறைச் சட்டத்தின் 97(1)(அ) பிரிவின் கீழ் அங்கீகரிக்கப்படுதல் வேண்டுமென இப்பாராளுமன்றம் தீர்மானிக்கிறது.

(அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது)

* 4.

நிதி அமைச்சர்,— மதுவரிக் கட்டளைச் சட்டத்தின் கீழ் அறிவித்தல்,— காலத்திற்குக் காலம் திருத்தப்பட்டவாறான மதுவரிக் கட்டளைச் சட்டத்தின் (52 ஆம் அத்தியாயம்) 28(அ) ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும் 16(இ) ஆம் பிரிவின் கீழ் மதுவரி உரிமக் கட்டணம் தொடர்பில் நிதி அமைச்சரினால் விதிக்கப்பட்டு 2015 பெப்புருவரி மாதம் 13 ஆம் திகதிய 1901/19 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2015.09.23 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான அறிவித்தல் அங்கீகரிக்கப்படுமாக.

(973 ஆம் இலக்க மதுவரி அறிவித்தல்)

(அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது)

* 5.

அபிவிருத்தி உபாய முறைகள் மற்றும் சர்வதேச வர்த்தக அமைச்சர்,— இறக்குமதி ஏற்றுமதி (கட்டுப்பாட்டுச்) சட்டத்தின் கீழ் ஒழுங்குவிதிகள்,— 1985 ஆம் ஆண்டின் 48 ஆம் மற்றும் 1987 ஆம் ஆண்டின் 28 ஆம் இலக்க சட்டங்களினால் திருத்தப்பட்டவாறான, 1969 ஆம் ஆண்டின் 1 ஆம் இலக்க இறக்குமதி ஏற்றுமதி (கட்டுப்பாட்டுச்) சட்டத்தின் 4 ஆம் பிரிவின் (3) ஆம் உப பிரிவு மற்றும் 14 ஆம் பிரிவு என்பவற்றுடன் சேர்த்து வாசிக்கப்படும் அச்சட்டத்தின் 20 ஆம் பிரிவின் கீழ் நிதி அமைச்சரால் ஆக்கப்பட்டு, 2015 பெப்புருவரி 26 ஆம் திகதிய 1903/41 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2015.09.23 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான ஒழுங்குவிதிகள் அங்கீகரிக்கப்படுமாக.

(அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது)

* 6.

நிதி அமைச்சர்,— முத்திரைக் கட்டண (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் கீழ் கட்டளை,— அரசியலமைப்பின் 44(2) ஆம் உறுப்புரையுடன் சேர்த்து வாசிக்கப்படும் 2006 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க, முத்திரைக் கட்டண (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 3 ஆம் பிரிவின் கீழான முத்திரைக் கட்டணம் தொடர்பில் நிதி, திட்டமிடல் அமைச்சரால் விதிக்கப்பட்டு, 2014 செத்தெம்பர் 30 ஆம் திகதிய, 1882/17 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2015.09.23 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான கட்டளை அங்கீகரிக்கப்படுமாக.

(அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது)

* அரசாங்க அலுவல்களைக் குறிக்கின்றன.

---

[1] ''சட்டமூலம் இப்பொழுது இரண்டாம் முறையாக மதிப்பிடப்பெறுமாக'' எனப் பிரேரணை கொண்டுவரப்பட்டு எடுத்தியம்பப்பெற்றது.

---